1972 ஆகஸ்ட் 12]

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்களால் அன்பளிப்பாக வழங்கப்படும் டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகளை பெறுவதற்கு வழிவகை ஏதாவது இருக்கிறதா? அப்படியானால் அது எந்த வகையில் நிறைவு செய்யப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி வருமானால் அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோனையா: டிராக்டர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு முழு மானியத் தொகை அடிப்படையில் அளிக்கப்படுகிறதா? அதில் திரிபுவனம் போன்ற ஒன்றிரண்டு ஒன்றியங்களுக்கு அளிக்கப்படவில்லையே, அமைச்சர் தலையிட்டு இதுபோல டிராக்டர்கள் வழங்கப்படாத ஒன்றியங்களுக்கு வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நமது மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் டிராக்டர்கள் வழங்கப்பட்டுவிட்டனவா? வழங்கப்படாமல் இருந்தால் இனியேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கொடுக்காதிருந்தால் அது பற்றி கவனிக்கப்படும்.

Bus taken over by Government

*** 113 Q.—THIRU N. K. PALANISAMY:** Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government have paid compensation for the take over of buses from the private bus owners for the period 1970–71?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1970-71-ஆம் ஆண்டில் தனியார் பேருந்துகள் எதையும் அரசு நாட்டுடைமையாக்கவில்லை. எனவே இழப்பீடு தருவது பற்றிய வினா எழவில்லை.

புறநகர்ப் பேருந்துகளிலிருந்து வருமானம்

*** 114. வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புறநகர்ப் பகுதிகளில் ஓடுகின்ற அரசுப் பேருந்தின் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?